தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1975 ஏப்ரல் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானம்

வினா நேரத்தை ஒத்திவைத்தல் குறித்து

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

"ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழு தீர்மானித்து, பேரவைக்கு அறிவித்துள்ள தற்கிணங்க, பேரவை விதி 22-இன் கீழ், முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்றுள்ளதை இன்று தளர்த்தி, இன்றைய நிகழ்ச்சி நிரலிலுள்ள 'இனம் 2—அறிக்கைகளை அளித்தல்' என்றுள்ளதை எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் குறித்த மதிப்பீட்டுக் குழு வின் பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை.

THIRU THOPPUR THIRUVENGADAM: Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Labour including Factories.

(ஆ) அரசினர் உறுதி மொழிக் குழுவின் எட்டாவது அறிக்கை

THIRU J. JAMES: Sir, I rise to present the Eighth Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]